பத்திரகாளியம்மன் துணை

கோயமுத்தூர் தாலூக்கா செட்டிபாளையம்

# பத்திரகாளியம்மன்

# பதிகம்.

இஃது

கோ தா. செட்டிபாளையம் சண்முகம்செட்டியார் குமாரர்

ஜோதிட வைத்தியம் மருதப்பசெட்டியார்,

அவர்களால் இயற்றப்பட்டது.

கோ. தா. செட்டிபாளையம்

மகா-ள-ஸ்ரீ. ம. ற. வெங்கிடோமிசெட்டியார்,

மகா ள-ஸ்ரீ. ம. ற. சின்னையன்செட்டியார்,

அவர்களால்

இ[illegible]க்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

O2998·38·218CP
N23
186819

உ

பத்திரகாளியம்மன் துணை.

கோயமுத்தூர் தாலூக்கா செட்டிபாளையம்

# பத்திரகாளியம்மன் பதிகம்.

இஃது

கோ. தா. செட்டிபாளையம் சண்முகம்செட்டியார் குமாரர்

ஜோதிட வைத்தியம் மருதப்பசெட்டியார்,

அவர்களால் இயற்றப்பட்டது.

கோ. தா. செட்டிபாளையம்

மகா-ா-ஸ்ரீ. ம. ற. வெங்கிடோமிசெட்டியார்,

மகா-ா-ஸ்ரீ. ம. ற. சின்னையன்செட்டியார்,

அவர்களால்

இம்மானுவேல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

## சாற்றுக்கவிகள்.

மகா-௱-௱-ஸ்ரீ. கொச்சி சமஸ்த்தானம் நல்லேப்பள்ளி ஆறு முகம்பிள்ளை அவர்கள் குமாரர் மகா-௱-ஸ்ரீ நாகலிங்கம்பிள்ளை, அவர்களால் இயற்றியது.

(1.) உலகத்திலெனைநித்த மருள்வைத்துவளர்விக்கு
முமைபக்கலுலதயப்படும்
பலர்மெச்சுபுகழ்பத்ரை மிசைதுத்யபதிகச்சொற்
பகர்வுற்றனனல்பத்தியால்
நலமிக்கவசியர்க்கு ளுயர்சண்முகச்செம்மல்
நனிபெற்றிடும்
வலமொய்த்தவசியப்பெ யனைவைத்தநகரத்தில்
வருவைத்ய மருதப்பனே.

——(○)——

பாலக்காடு தாலூக்கா நோன்புக்கோடு மகா-௱-ஸ்ரீ. சின்னத்தம்பிசெட்டியார் அவர்கள் குமாரர் மகா-௱-ஸ்ரீ. காளிசெட்டியார் அவர்கள் இயற்றியது.

(2.) பூத்தமலர்க்கிழவனையே முதலாயவுயிர்களெல்லாம்
பூத்துக்காய்த்துத்
தீத்தொழில்வைத்தறிய நடங்குயிற்றிவிளையாடுமுக்கட்
டேவிபாதத்
தாத்தபரிவாலமைத்தோர் தமிழ்ப்பதிகம்பாடினன்
வேலவன்பேர்நத்தத்
தேத்துபுகழ்சண்முகவே ளீன்றமருதப்பனெனு
மியற்பேரோனே.

சோ. தா. செட்டிபாளையம் ரா. நஞ்சப்பகவுண்டர் குமாரர்

R N. கல்யாணசுந்தரகவுண்டர்,
அவர்களால் இயற்றியது.

(சந்த விருத்தம்.)

(3,) உலகாருயிர்க்குறுதி பெருமாளித்திலகு
திருமாலெனக்கரியஉருவோன்பின்
இலகாருமைச்சுமிசு மெரிகோபமத்திலுதி
யரிவாகனத்தில்வருமியல்நீலி
நலமார்பதத்திலணி பதுவாயுயர்ப்பதிக
மதுவேசெயும்வணிகநகர்மேவும்
வளனூர்குகப்பெயரானருள் ஜோதிடவ்வைத்திய
மருதப்பசீலதமிழ்வலவோனே.

(விருத்தம்,)

(4) சீர்பூர்த்தசடைக்கடவுளம்மை சினத்துதித்தபத்ரைநீலி
[பாதத்
நேர்பூர்த்தசெந்தமிழாற்றுதிபதிக மிருமன்பாலேற்றி
[வைத்தோன்
கார்பூத்தவணிகநகர்ச்சண்முகவேள் தவத்திலுதிகரு
[ணைபென்னும்
சீர்பூத்தமருதப்பன் ஜோதிடவைத்தியத்தில்வெகுசிறப்
[புற்றோனே.

உ.

பத்திரகாளியம்மன் துணை.

# பத்திரகாளியம்மன் பதிகம்.

(காப்பு.)

திருவுற்றகோவைமுதலிசை பெற்றுவாழுமிரு
திணைமுற்றுமீனவுமையவள்பெற்றிடு

முருவுற்றதேவிமது பதிபத்ரகாளிமிசை
யுலகத்திலேபதிகமுரைசெய்யமன்
றருவுற்றவேளமுகனுய செந்தையாதிசிவை
தகைகந்தசாமிமலருரையிந்திரை
மருவுற்றநேமிகலை மகளன்னவூர்திபக
வதிவிந்தைதேவிவர்பொன்னடிகாப்பதே.

அவையடக்கம்.

ஆழியுடுத்தார்புவி யிலங்கணநீராழ்ந்தகன்ற
சூழிதனிற்சேர்ந்திடிற்றள்ளாதுதொகும்—பாழியென
சீர்புகழஞ்சேர்பெரியோரார்வமூரதேர்வரெனப்
பார்புகழுமோர்பதிகப்பா.

நூல்.

(1.) சீரணிகயிலையாளியினிடபால் சிவைசினத்து
திக்ககங்காளி
ஆரணி யரனு ரழற்கணிலுதித்தே ரானபத்திரனணை
மாதே
தாரணிதனிலேன்றூர் சிசுக்கமுதந்தந்தனை
வந்தருள்புரிவாய்
பாரணிவணிகமா நகர்மேவும்பத்திரகாளி
யம்பிகையே.

(2.) திங்கள்வெண்கலையுந் திகள்முத்தாவிக்கை
திலகம்பூண்பணிசிலம்பலம்ப
செங்கயிற்சூலம் வெண்டலையேந்திசிற்றமார்
தீவிளிப்பகுவாய்
சிங்கவாகனத்திலமர்ந்திடுமுமையே
சிறப்புடன்வந்தருள்புரிவாய்
பங்கமில்வணிகமாநகர்மேவும்
பத்திரகாளியம்பிகையே.

(3.) வரைதனிலுதித்து மாலயற்காய்முன் வான்கிழி
வரைதாய்வளர்ந்தும்
வரைதனைவில்லாய் வளைத்திடுமாதியானுட
நடமிடுமாதே
வரைதனியுலகில்வந்திருநான்கைஸ்வரியமும்
கொடுத்தருள்புரிவாய்
வரைதனிவணிகமானகர்வாழும்
பத்திரகாளியம்பிகையே.

(4) மதிநிரைவிக்ரமாதித்தன் கேட்டவாங்
கொடுத்தொருமறையவர்க்குத்
துதிநிரைகாளிதாசனென்றும்பேர்
துலங்கவைத்தாமலையாமல்
நிதிநிரையாயுளுடன் வரம்கொடுத்து
நிதமதிபவுசருள்புரிவாய்
பதிநிரைவணிகமா நகர்மேவும்
பத்திரகாளியம்பிகையே.

(5) மன்னவனரிச்சந்திரர்க்குமுன்பொன்னால்
வரிசிலைபரிரதமீந்துங்
கன்னியாம்பதி மாமடந்தைக்குமருந்து
வம்புகுந்தாண்டுகாத்தமலை
பின்னிசைத்தேவி யிருதயத்திருந்தெஞ்ஞா
ன்றுநீங்காதருள்புரிவாய்
பன்னலவணிகமா நகர்மேவும்
பத்திரகாளியம்பிகையே.

(6) அகநிரைபஞ்சாக் காவடிவரனைவலஞ்செய்
துந்தனையலால்மேரு
புகலவின்றெனைத்தாளங்கான்றனக்குக்கனி
யருளுமைபுராரியைப்போல்

திகம்பரியுமைநித்திபங்தொழு மேற்குந்

திகழ்தயைசெய்தருள்புரிவாய்

பகம்நிறைவணிகமாநகர்மேவும்

பத்திரகாளியம்பிகையே.

(7) சுந்திரப்பருதியாதியொன்பதின்மர்

சூழ்திசைபுத்திசித்திரமோ

டந்தரமந்தராந்தரஞ்சூட்சு

மம்பிராணன்னிவைதனிலே

தந்தரமாகவரும்பலதுன்பெங்களை

யணுகாதருள்புரிவாய்

பந்தமாம்வணிகமா நகர்மேவும்

பத்திரகாளியம்பிகையே.

(8) வாதமும்பித்தசேத்துமவற்றுள்

வயங்கியதொந்தத்தால்வளரும்

பேதகமானபிணியெழுபத்திராயிரமும்

பிரவினையும்

ஏதமுள்ளவையும் வந்தெனையணுகா

தேவகைசெய்தருள்புரிவாய்

பாதனவணிகமா நகர்மேவும்

பத்திரகாளியம்பிகையே.

(9) உலகுயிரனைத்து மீன்றமுதாட்டி

மூத்தமியுமைத்தொழுமேற்கு

நலம்பெரும்பொன்னின் பறமுதலெட்டைல்

வரியமுநல்கியாண்டதன்பின்

குலஞ்செழித்திடவு நிதமுறவந்துன்

குவிதயைசெய்தருள்புரிவாய்

பலம்பெரும்வணிகமா நகர்மேவும்

பத்திரகாளியம் பிகையே.

(10) இசைபெருந்தேவரினிவியப்போங்கு
மெழிலுருஞ்சித்திரம்வாய்ந்த
மிசைபெருமண்டபத்தில்வீற்றிருக்கு
மின்மதுபதிகடல்சூழ்ந்த
திசைபெருந்தேவிபயிரவியேற்குந்
திருவுளமகிழ்ந்தருள்புரிவாய்
பசைபெரும்வணிகமாநகர்மேவும்
பத்திரகாளியம்பிகையே

வாழி.

வேதமிசையாதியுமைவேணியனார்வேழமுகன்
போதமிசையாறுமுகன்பொன்னுலக—மோதமிசை
பையமிசைபதிகமன்புடன்சொற்றோர்கேட்போர்
வையமிசைநீடுழிவாழி.

முற்றிற்று.